முதன்மை சார்பு நீதிமன்றம், பழனி

M.C.O.P. No. 25/2021

தேதி : 22-06-2026

(ம.சா.1) – திரு.தங்கவேல்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு 6ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**6ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1. நான் தாக்கல் செய்த ஆவணங்களின் விபரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். மனு மற்றும் நிரூபணவாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் தெரிந்து தான் கையெழுத்து போட்டேன் என்றால் சரிதான். கனகராஜ் என்பவர் கொடுத்த புகாரின் அடிப்படையில் தான் ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். நானும் என்னுடைய நண்பர்கள் சின்னச்சாமி என்ற பழனிச்சாமி, வாகனத்தின் ஓட்டுநர் மற்றும் நண்பருமான ரத்தினமூர்த்தி, ராமசாமி, செல்வராஜ் ஆகியோர் வீரப்பூர் கோவிலுக்கு சென்றுவிட்டு திரும்பும்போது விபத்து நடந்தது என்றால் சரிதான். மேற்படி ரத்தினமூர்த்தி என் நண்பர் என்பதால் வாகனத்தை நான் ஓட்டி சென்றேன் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை என்னுடைய கவனக்குறைவால் தான் விபத்து நடந்தது என்று சொல்லி பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் நான் அப்படி அதிவேகமாக ஓட்டவில்லை. பின்னர் போலிசார் விசாரித்து விபத்தானது என்னுடைய கவனக்குறைவால் தான் ஏற்பட்டது என்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் அது பொய் வழக்கு.

2. என் மீது தவறாக புகார் பதிவு செய்யப்பட்டது என்று சொல்லி மேல்நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்த ஆவணத்தின் அடிப்படையிலேயே விபத்திற்கு நான் தான் காரணம் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என்னுடைய ஓட்டுநர் உரிமம் தற்போது வரை நடப்பில் தான் உள்ளது என்றால் சரிதான். நான் குற்றம் இழைத்தவர் என்பதால் நான் தாக்கல் செய்த சட்டப்பிரிவின் கீழ் இம்மனு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 1முதல் 5 எதிர்மனுதாரர்கள் என் இறந்தபோன நண்பர் ரத்தினசாமியின் வாரிசுகள் என்றால்

சரிதான். விபத்து சமயத்தில் நான் சொந்த வியாபாரம் செய்து மாதம் 40 ஆயிரம் ஈட்டி வருகிறேன் என்றும், அதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், ஆனால் டோசர் வாகனத்தை வைத்து வாடகைக்கு விட்டு மற்றும் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன். விபத்து என்னுடைய கவனக்குறைவால் தான் ஏற்பட்டது என்பதாலும், 6ம் எதிர்மனுதாரருக்கு எதிராக இழப்பீடு கோரி இம்மனு தாக்கல் செய்ய முகாந்திரம் இல்லை என்றும், எனவே மனு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

ஒம்.K/ ரேணுகாதேவி,
முதன்மை சார்பு நீதிபதி,
பழனி.